1991 சனவரி 21]

திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென்காசி பகுதியிலே சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கியும், அங்கே விவசாயிகள் பூக்களை உற்பத்தி செய்வதற்காக பூந்தோட்டங்களை ஏற்படுத்தியும் கூட இப்போது அந்தத் தொழிற்சாலை கூட்டு நிறுவனமாக பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம், பவானிசாகர் பகுதிகளில் ஏற்படுத்துவதற்காக அரசு முயற்சி செய்ததாகக் கூறப்படுகிறதே, அதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி ஒரு பரிசீலனை அரசாங்கத்திடம் இல்லை. 35 விவசாயிகள் தான் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் 32 ஆயிரம் சொச்சம் ரூபாய் கடன் வாங்கி இருக்கிறார்கள். இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்து இருப்பதே அந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடையக்கூடிய ஒன்று.

வேளாண்மைப் பணிகளுக்கு பிளாஸ்டிக் பயன்படுத்துதல்

*438—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் தொழில்துறை பொறியியல் தேசிய பயிற்சி நிறுவனம் (National Institute of Training in Industrial Engineering) மூலம் வேளாண்மையில் பிளாஸ்டிக் சாதனங்களை அறிமுகப்படுத்தும் முயற்சி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக்கில் சாதனங்களைத் தயாரித்தால் அது மெயின்டனன்சுக்கு ஈஸியாக இருக்கும்; துருப் பிடிக்காது; மக்களுக்கு விலை குறைவாகக் கிடைக்கும் என்று விவசாயிகள் மத்தியில் சொல்லப்படுகிறதே, அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1989 ஜூலை மாதத்தில் கடித எண் 932/85/என்ஐடி/நாள் 10—7—1979இல் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தை மத்திய அரசு உதவியுடன், சொட்டுத் தெளிப்பு நீர்ப் பாசன முறையை ஊக்கப்படுத்தும் திட்டத்தை, பிளாஸ்ட்டிக் கல்ச்சர் திட்டத்தின் கீழ் இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் உதவியுடன் செயல்படுத்த கருத்துரு ஒன்றை நம்முடைய மாநில அரசாங்கத்திடம் கேட்டார்கள். நம்முடைய அரசு அந்தக் கருத்தின் அடிப்படையில் 1989 இல் இந்த அரசு பொறுப்பேற்ற உடன், மத்திய அரசாங்கத்துக்கு அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஒரு அறிக்கையை அவர்களுக்கு அனுப்பி வைத்து இருக்கிறோம். மத்திய சர்க்காரிடம் இருந்து அதற்கான அனுமதி இன்னும் வரவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் அனுமதி வராமல் கூட நம்முடைய மாநில அரசு செய்வதற்கு எண்ணங்கள் இருக்கின்றனவா ? ஏனென்றால் விவசாயிகள், அது கிடைத்தால் மிக நன்றாக இருக்கும் என்று கூறுகிறார்கள். எல்லாத் துறையிலும் பிளாஸ்ட்டிக் சாதனங்கள் வந்துவிட்டன. விவசாயத் துறையில் மாத்திரம் தான் அது இல்லை. குறிப்பாகச் சொன்னால் கடலைப் பருப்பு உடைக்கின்ற இயந்திரம் தயாரித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இதுபோன்றவைகளை எல்லாம் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் தொடங்குவதற்கு மாநில அரசுக்கு எண்ணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

*1632—திரு. கோ பூவராகன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.